

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டத்தில் சட்டமன்ற பொது கணக்கு குழு தலைவர் கு. செல்வப் பெருந்தகை தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன், எம்.எல்.ஏ.க்கள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி , திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆசிஸ் ராவத் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### மதுரை தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக

# பேரையூரில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் – சேலம் சுஜாதா சிறப்புரை!

மதுரை, ஜன. 24 -

மதுரை தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பாக 25ஆம் தேதி பேரையூரில் மாணவரணி அமைப்பாளர் பாண்டி முருகன் தலைமையில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாலை ஆறு மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில பிரச்சார குழு செயலாளர் சுஜாதா, மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர். அதன் விவரம்

மதுரை தெற்கு மாவட்டம் மாணவரணி சார்பாக மொழிபோர் தியாகி களுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2025 - சனிக்கிழமை) பேரையூரில் மாலை 6மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் இரா. பாண்டி முருகன் தலைமையில் வகிக்கின்றார்.

செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் கொ.தனபாண்டியன், ராமமூர்த்தி, நாகராஜன், பாண்டியன், மதன்குமார், தங்கபாண்டியன், சண்முகம் கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், முத்து கணேசன், பிரியதர்ஷினி, மாணவரணி துணை அமைப்பாளர் ஜெய்லானி, முல்லை மூவேந்திரன், மருதுபாண்டியன், கண்ணன், செந்தமிழ் அரசி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கழக நிர்வாகிகள் இ. வரிசை முகமது, தனசேகரன் வரவேற்புரை நிகழ்த்த உள்ளனர்.

மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்ற உள்ளனர்

மேலும் தலைமை கழக பேச்சாளர்கள் பழனி மு.அப்பாஸ், கடையநல்லூர் இஸ்மாயில், மதுரை சாது ராஜன், தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி வனராஜா, டிஸ்கோ அலாவுதீன், பா.செல்லத்துரை உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர்

மேலும் மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள் சாதிக் முகைதீன், மணிகண்டன், அன்பழகன், விக்னேஷ் ,அருண் பிரசாத் ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

### நெல்லை – பாளையங்கோட்டையில் பள்ளிகளுக்கு இடையிலான

# மாநில அளவில் - குடியரசு நாள் விளையாட்டுப் போட்டிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து சான்றிதழ்கள் வழங்கினார்!

நெல்லை, ஜன. 25 -

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சீவலப்பேரி சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் வளாகத்தில் 22ஆம் தேதி பள்ளிகளுக்கு இடையிலான மாநில அளவில் நடைபெறும் பாரதியார் தின மற்றும் குடியரசு தின நீச்சல் போட்டிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் விளையாட்டு துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டு அளவில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சர்வதேச அளவில் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இன்று நடைபெறும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் வளாகமானது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நீச்சல் வளாகத்திற்கு ஈடானது. துணை முதலமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தந்த போது நீச்சல் வளாகத்தினை ஆய்வு செய்து புனரமைக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் ரூபாய் 10 லட்சம் மதிப்பில் நீச்சல் வளாகம் புனரமைக்கப்பட்டு, இன்று மாநில அளவில் நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

பல்வேறு மாவட்டங்களில் வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த மாணவ மாணவிகள் இன்று நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்கேற்றுள்ளனர். இன்றும் நாளையும் நடைபெறும் போட்டிகளில் 1407 மாணவிகளும் இன்று 240125 மற்றும் 250125 ஆகிய தேதிகளில் 2063 மாணவர்களும் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

நெல்லை மாவட்ட நீச்சல் வீரர், வீராங்கனைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக பன்னாட்டு அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் நித்திஷ் கலந்து கொண்டார். தேசிய அளவிலான நீச்சல் போட்டியில் நமது மாவட்டம் 48 தங்கப்பதக்கமும்,36 வெள்ளி பதக்கமும்,18 வெண்கல பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

மேலும் மாநில அளவில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் நீச்சல் வீராங்கனை கள் 15 தங்கப்பதக்கம்,10 வெள்ளி பதக்கம், 9 வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்து மாநிலத்தில் முதல் மாவட்டமாக நமது நெல்லை மாவட்டம் திகழ்கிறது.

முதலமைச்சர் கோப்பைகான நீச்சல் போட்டியில் 7 தங்கப்பதக்கமும்,4 வெள்ளி பதக்கம்,5 வெண்கல பதக்கம் வென்று ரூபாய் 12.50 லட்சம் பரிசுத்தொகை வென்று சாதனை படைத்துள்ளனர்.நமது உடலையும், மனதையும் ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் வைத்துக் கொள்வதில் நீச்சல் தற்போது சிறந்த விளையாட்டாகவும் மாறி உள்ளது.நீச்சல் மனதை ஒருமுகப்படுத்துவதில் முதன்மையான விளையாட்டு என்பதை அறிந்து உங்கள் குழந்தைகளை நீச்சல் துறையில் பயிற்சி அளிக்கும் பெற்றோர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு சர்வதேச அளவிலான விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு உத்தரவிட்டதன் அடிப்படையில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜ் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார் களக்காடு நகராட்சி துணைத் தலைவர் ராஜன் மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி)முத்துராஜ்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக் ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,ஆரோக்கிய எட்வின் மற்றும் பயிற்சியாளர்கள்,ஆசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகரம் 49வது வார்டுக்கு உட்பட்ட ராஜபாண்டி நகர் பகுதியில் கடந்தாண்டு மழை வெள்ளத்தின் போது வீடுகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு JSW நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதி மூலம் வீடுகள் கட்டித் தர சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் அடிக்கல் நாட்டினார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், பகுதிச் செயலாளர் ராமகிருஷ்ணன்,JSW அலுவலர் சந்திரமோகன்,வட்டச் செயலாளர் முக்கையா, மாமன்ற உறுப்பினர் திருமதி. வைதேகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மதுரைக்கு வருகை புரிந்த கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திமுக சார்பில் விரகனூர் ரவுண்டானாவில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் திரளான கழகத்தினர் இரு வண்ணக் கொடியேந்தி சிறப்பான வரவேற்பு கொடுத்த போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், ஏர்போர்ட் பாண்டியன், வக்கில் பாலாஜி, வக்கில் கலாநிதி, அஜித் பாண்டி, கிருஷ்ணபாண்டி மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

### ஈரோடு இறைவன் – ஒப்பிலாமணி – அருள்தாஸ் சிறப்புரையாற்றுகின்றனர்!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் வீரவணக்க நாள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, ஜன. 25 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணியின் சார்பில் கிருஷ்ணகிரியில் இன்று (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயேந்திரன் தலைமை தாங்குகின்றார்.

கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட துணை அமைப்பாளர் ராமச்சந்திரன் வரவேற்புரை ஆற்றுகின்றார். கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் , ஒன்றிய கழக செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் தேங்காய் சி. சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், நரசிம்மன், குண.வசந்தரசு, எக்கூர். செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வேங்கடப்பன்,



பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம் , ஹரிஹரன், உமா சத்தியராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மாநில இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன், தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆலந்தூர்.ஒப்பிலாமணி, மயிலாடுதுறை அருள்தாஸ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கூட்டத்தில் பாராட்டு பெறும் மொழிப்போர் தியாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி. கோவிந்தசாமி, ஏ.தனபால் இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், மாவட்டப் பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன் , நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் காஞ்சனா கமலநாதன், தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில மகளிர் அணி பிரசாரக் குழு செயலாளர் மாலதி நாராயணசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாநில தொ. மு.ச. துணை செயலாளர் கிருஷ்ணன், கழக பிரமுகர்கள் அன்பரசன், சீனிவாசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன் , லட்சுமி பிரியா, புஷ்பா விஜய் ராஜசேகர் , இளையராஜா, தமிழ்ச்செல்வன், காந்தி , பாலாஜி ஜெயக்குமார் , வேல்மணி, மோகன் , பாரி அம்மன் ராஜா ,சங்கர் , ஜீவானந்தம் ,சுரேஷ்குமார், மாணிக்கம், மணி விஜயன், வெங்கடேஷ் ராஜா, சத்திய நாராயண மூர்த்தி, நேதாஜி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மணிபாரதி நன்றியுரை ஆற்றுள்ளார்.

ஆகவே இந்நாள், முன்னாள் மாநில, , மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று மாபெரும் பொதுக்கூட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தயத்தில் பாரம்பரிய முறையில் மாட்டு வண்டியில் வந்த உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, மதகுருமார்கள், பொதுமக்கள் முன்னிலையில் பொங்கல் வைத்து உறி அடித்து நலத்திட்ட உதவிகளை வழங்கிசமத்துவ பொங்கல் விழாவை கொண்டாடினார், அதனைத் தொடர்ந்து கள்ளிமந்தையம் பகுதியைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு நடனமாடிய வள்ளி கும்மியாட்ட நிகழ்வையும்கண்டு ரசித்தார்.இவ்விழாவில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி ஒன்றிய செயலாளர்கள் தங்கராஜ், பொன்ராஜ், உள்ளிட்டநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.படம். திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தயத்தில் அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் சமத்துவ பொங்கல் விழாநடைபெற்றது.



தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பரணீஸ்வரன் ஏற்பாட்டில் கழக மாநில இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நரிக்குறவர்களுக்கு அறுசுவை உணவு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி வழங்கினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. வடக்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப் கான் . மாவட்ட பொருளாளர் சுரேஷ்மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ் துணை அமைப்பாளர் செல்லத்துரைமற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.